தேனி மாவட்டம், தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நேற்று (03.09.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கடந்த சில நாட்களுக்கு முன்பு கரடிதாக்கியதில் காயமடைந்து கிசிக்சை பெற்றுவரும் வருசநாடு பகுதியை சேர்ந்த விவசாயி திரு.முருகன் என்பவரை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், சட்டமன்ற உறுப்பினர் ஆ.மகாராஜன் (ஆண்டிபட்டி) ஆகியோர் உள்ளார்கள்.

சென்னை, கொளத்தூர், பேப்பர் மில்ஸ் சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் நவீன சந்தையின் (Kolathur Modern Market) முன்னேற்றப் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது மேயர் திருமதி.ஆர். பிரியா, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர். கௌஷிக் மண்டலக் குழுத்தலைவர் சரிதா மகேஷ்குமார், சிஎம்டிஏ தலைமைப் பொறியாளர் மகாவிஷ்ணு, உள்ளாட்சி கண்காணிப்பு பொறியாளர் பாலமுருகன், பிரதிநிதிகள் ஐசிஎப்.முரளிதரன், சந்துரு, மகேஷ்குமார். மாமன்ற உறுப்பினர்கள் நாகராஜன், திருமதி.தாவூத்பீ, திருமதி.அமுதா, திருமதி.யோகபிரியா, திருமதி.ஸ்ரீதணி மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. - டி.கே.எஸ்.இளங்கோவன் - இரா.கிரிராஜன் எம்.பி. பங்கேற்பு!

இராயபுரம் ஆர். ஏகாம்பரம் இல்ல மணவிழா வரவேற்பு!

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. தலைமை! கலாநிதி வீராசாமி எம்.பி. - ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. வாழ்த்து!

சென்னை, செப்.4-

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் கிழக்குப் பகுதி 51 (அ) வட்டம், தொழிலாளர் அணி பகுதி அமைப்பாளர் ஆர்.ஏகாம்பரம் - லலிதா ஆகியோரின் புதல்வி ஈ. கலைவாணி - பி.மணி கண்டன் ஆகியோரின் மணவிழா இன்று (4.9.2025-வியாழக்கிழமை) காலை 7.30 மணிக்குதிருவொற்றியூரில் உள்ள வடிவுடையம்மன் கோயிலில் நடைபெறுகின்றது.

தொடர்ந்து மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நாளை (5.9.2025-வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு இராயபுரம், செட்டித் தெருவில் அமைந்துள்ள ஜெய் பேலஸில் நடைபெறுகின்றது.

மணவிழா வரவேற்பில் தொழிலாளர் அணி பகுதி அமைப்பாளர் ஆர்.ஏகாம்பரம் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

மணவிழா வரவேற்பிற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

மணவிழா வரவேற்பில் மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே. எஸ்.இளங்கோவன், வழக்கறிஞர் இரா. கிரிராஜன் எம்.பி., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ., ஜெ.ஜெ.எபிநேசர் எம்.எல்.ஏ., கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., தா. இளைய அருணா, ந. மனோகரன், இரா.செந்தில், வ.பெ.சுரேஷ், ஜெபதாஸ் பாண்டியன், இரா.லட்சுமணன், ஜெயராமன், முருகன், வே.சிவக்குமார், சு. சேகர், இராஜேந்திரன், சண்முகம் மற்றும் பலர் கலந்து கொண்டு மணமக்கள் ஈ.கலைவாணி- பி. மணி கண்டன் ஆகியோரை வாழ்த்துகின்றனர். வட்டச் செயலாளர்கள் கே.வி.கணேஷ், பெ. கண்ணன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் - இரா.துரைராஜ் - எம்.கிருஷ்ணமூர்த்தி ஆய்வு!

சைதை 168 -வது வார்டில் 'உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்!

வட்டச் செயலாளர்கள் த.மோகன்குமார் - ராதாகிருஷ்ணன் அறிக்கை!

சென்னை, செப். 4 -

சைதை சட்டமன்றத் தொகுதி - கிழக்குப் பகுதி 168-வது வார்டில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம் இன்று நடைபெறுகிறது. இதில் அமைச்சர் மா. சுப்பிரமணியன் முகாமை தொடங்கி வைத்து, முகாமை பார்வையிட்டு, பயனாளிகளுக்கு ஆணைகளை வழங்குகிறார். இதில் வட்டக் கழகத் தினர் பொதுமக்களை அழைத்து வந்து மனுக்கள் வழங்கி நலன்பெறச் செய்திட வேண்டுமாய் வட்டச் செயலாளர்கள் த. மோன்குமார் எம்.சி., ராதாகிருஷ்ணன் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து அவர்களது அறிக்கை வருமாறு:

முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் படி, பொதுமக்களின் குறைகளை அவர்களின் வீட்டிற்கே வந்து கேட்டறிந்து தீர்வு காணும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் ஜூலை 15, 2025 முதல் நவம்பர் 2025 வரையிலும் அனைத்து மாவட்டங்களிலும் 10,000 முகாம்கள் நடைபெற்று வருகின்றன. இம்முகாம்களில் பெறப்படும் மனுக்கள் குறித்து 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமெனமுதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார். இத்திட்டத்தின் கீழ் நடத்தப்படும் முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சேர்ந்த 43 சேவைகள் வழங்கப்படுகின்றன.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் சேருவதற்கான விண்ணப்பங்கள் ''உங்களுடன் ஸ்டாலின்'' முகாம்களில் மட்டுமே வழங்கப்படுகின்றன. மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று விண்ணப்பத்தினைப் பெற்றுப் பூர்த்தி செய்து அளித்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் ரேஷன் கார்டில் உள்ள குறைபாடுகள், ஆதார் கார்டு, சொத்து வரி, குடிநீர் - கழிவு நீர், மின்சாரம், பட்டா, பெயர் மாற்றம் - திருத்தம் பெற, வாரிசு சான்றிதழ், வருமான சான்றிதழ், கைம்பெண் உதவித் தொகை, முதியோர் உதவித் தொகை, காவல் துறையில் புகார் கொடுக்க போன்ற 46 துறைகளில் உதவி பெற உங்களுடன் ஸ்டாலின் முகாம் வழிவகுக்கிறது.

சைதை தொகுதி, வார்டு எண்.168க்குட்பட்ட பொது மக்களுக்கான "உங்களுடன் ஸ்டாலின்" முகாம், பெருநகர சென்னை மாநகராட்சியின் ஏற்பாட்டில், இன்று (04.09.2025) லயன்ஸ் கிளப் பள்ளி வளாகம், கிண்டி லேபர் காலனியில் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை நடைபெறுகிறது.

இதில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா. சுப்பிரமணியன், பகுதிச் செயலாளர்கள் - மண்டலக் குழுத் தலைவர்கள் இரா. துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்கின்றனர்.

எனவே நமது வார்டுக் குட்பட்ட கழக நிர்வாகிகள், அனைவரும் தங்கள் பகுதியில் உள்ள பொதுமக்கள் அவர்களின் குறைகளை கேட்டறிந்து முகாமில் மனு வழங்கி பெயன் பெறச் செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர்கள் த.மோகன் குமார் எம்.சி., ராதாகிருஷ்ணன் ஆகியோர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

சென்னை தென்மேற்கு மாவட்ட பொறியாளர் அணி புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம் மாவட்ட அமைப்பாளர் இரா.சக்கரவர்த்தி ஏற்பாட்டில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ.தலைமையில் மயிலை மேற்கு பகுதி கழக செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் ஐ.ஜஸ்டின், சி.இராஜேந்திரன், சௌந்தர்ராஜன், ந.மோ.தமிழ், பொறியாளர் அணி மயிலை மேற்கு கிழக்கு தியாகராயர் நகர் கிழக்கு மேற்கு பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 4. ல் 55 வது வார்டில் மக்களுடன் முதல்வர் குறைத்திருக்கும் முகாமில் பயனாளிகளுக்கு தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. மருத்துவ உபகரணங்களை வழங்கினார், இதில் தாம்பரம் மேயர் திருமதி வசந்தகுமாரி கமலக்கண்ணன். பகுதி செயலாளரும் மாநகராட்சி நியமன குழு உறுப்பினரும் 56 வது மாமன்ற உறுப்பினர் எஸ்.சேகர், எம்.சி. பகுதி துணை செயலாளரும் 55வது மாமன்ற உறுப்பினருமான பி. புகழேந்தி எம்.சி, கழகப் பேச்சாளர் கருணாகரன், பகுதி இளைஞரணி செயலாளர் பிரகாஷ், பெரியார் நகர் கணேசன், முனியப்பன், நாகப்பன், அருள், சசி,குமரவேல், பகுதி பிரதிநிதி ராஜா, மற்றும் கழகத் தோழர்களும் பயனாளி களும் கலந்து கொண்டனர்.

நே.சிற்றரசு- தயாநிதிமாறன்- எம்.கே.மோகன்- கார்த்திக் மோகன் வாழ்த்துரை!

அண்ணாநகர் வடக்கு பகுதி ஆதிதிராவிடர் நலக்குழு மு. தீனதயாளன் இல்ல மணவிழா வரவேற்பு!

சென்னை செப்: 4-

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணா நகர் வடக்கு பகுதி ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் மு. தீனதயாளன் அவர்களின் மகள் டி. தர்ஷினி என்கிற பவித்ரா- என். பிரவீன் ஆகியோரின் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி இன்று (4.9.2025 வியாழக்கிழமை) மாலை 6 மணி அளவில் ஸ்ரீ பத்மாவதி வெங்கடேஸ்வரா மஹால் தியாகராயர் நகரில் நடைபெறுகிறது.

இம்மணவிழா நிகழ்ச்சிக்கு அண்ணா நகர் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ச. பரமசிவம் தலைமை ஏற்கிறார்.

100 அ, வட்ட கழகச் செயலாளர் வழக்கறிஞர் கு. பாபு முன்னிலை வகிக்கிறார்.

வசந்தி பரமசிவம் எம்.சி, இரா. வேல்முருகன், பி. வின்ஜாஸ்டாலின், டி.ஜான், மோ.லிங்கேசன், வி. சுரேஷ், பி.கீதா, என். ராஜன், ஜி.சாமிநாதன், சி.ரகுராமன், ஏபிஎம். சாம்சங், மு.கதிரவன், பவானி வெங்கடேசன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

மணவிழா வரவேற்பில் சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே. சிற்றரசு, தயாநிதி மாறன் எம்.பி, எம்.கே. மோகன் எம்.எல்.ஏ, கழக மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

விழாவில் வே.கௌதமன், த. சேரன், ஏ.டி.முருகன், கராத்தே ஆனந்தன், ரஜினி கார்த்தி, ராணி ரவிச்சந்திரன் எம்.சி, வட்டச் செயலாளர்கள் க. கோவிந்தராஜ், சி.பி. திருமலை, பி. சந்திரசேகர், எம்.ஜி. ரவிக்குமார், பி. ஜெய்சங்கர், அருள் கண்ணன்,

மாமன்ற உறுப்பினர்கள் மெட்டில்டா கோவிந்தராஜ், புஷ்ப லதா ஜெய்சங்கர், பகுதி நிர்வாகிகள் பா.பிரபு, கே.பி.சுரேந்தர், இரா. இளங்கோவன் உள்ளிட்ட மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

ஜி.சிவக்குமார், மா. பழனி, தி.முக்கேஷ் ஆகியோர் நன்றியுரையாற்றுகின்றனர்.

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில்

வட்டச் செயலாளர்கள் - பாக முகவர்கள் கூட்டம்!

தி.மு.தனியரசு ஏற்பாட்டில் – எஸ்.மோகன் ஆலோசனை!

சென்னை, செப். 4 -

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் கிழக்கு பகுதி சார்பில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனையின் படி திருவொற்றியூர் கிழக்குப் பகுதி செயலாளர் 1வது மண்டலக் குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் பகுதிக் கழக அலுவலகத்தில் பகுதி அவைத் தலைவர் ஆர். சி.ஆசைதம்பி தலைமையில் வட்ட செயலாளர்கள், பாக முகவர்கள் BLA-2, துணை பாக முகவர்கள் BLC ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் திருவொற்றியூர் தொகுதி பொறுப்பாளர் தியாகராயர் நகர் எஸ். மோகன் ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், இரா.முருகேசன், டி.ஏ.ராஜ், சாந்தி, எம்.வி.குமார், கே.பிரபாவதி, ஆர்.குமரேசன், த. கார்த்திகேயன், டி.சி.வி. மணிகண்டன், எம்.எல்.சரவணன், எஸ்.தமிழ்செல்வன், குருத்து சி.முனுசாமி, க.வீ.சதிஷ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர், ஏகா.கார்த்திகேயன், பி.எஸ்.சைலஸ், ஆர்.டில்லிராஜ், எஸ்.பாஸ்கர், ஒய். ரஜினிநந்தி, ஆர்.ரஜினி பாபு, வி.பழனிவேல், ம. ஜெயராமன், கே.கார்த்திகேயன், ப.சந்தானகிருஷ்ணன், அ.அப்துல்சலிம், ம.எத்திராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இராயபுரம் தொகுதியில்

49, 52 -வது வார்டுகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. ஆய்வு!

சென்னை, செப். 4 -

இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் 49, 52 ஆகிய வார்டுகளில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாட்டின் அனைத்து மக்களுக்கும் அரசின் சேவைகள் சென்று சேர்ந்திட வேண்டும் என்ற குறிக்கோளுடன், மக்களின் குறைகளை மக்களைத் தேடி வந்து தீர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில், முதலமைச்சர் அவர்களின் முன்னெடுப்பின் கீழ், உங்களுடன்_ஸ்டாலின் திட்ட முகாம், இராயபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 49வது வார்டு ஜி.ஏ.சாலை, ஒய்.எம்.சி.ஏ. வணிக வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த முகாமில், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி அவர்கள் கலந்து கொண்டு, அனைத்து துறைகளிலும் பொதுமக்களின் மனுக்கள் முறையாக பதிவு செய்யப்படுகிறதா என்பதை ஆய்வு செய்து, தீர்வு காணப்பட்ட மனுக்களை உடனடியாக பொதுமக்களுக்கு வழங்கினார். மேலும் மீதமுள்ள மனுக்கள் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டும் என்று அரசு அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் செந்தில் குமார், வட்டச் செயலாளர்கள் சதீஸ்குமார், கலைச்செல்வன் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட, கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உடனிருந்தனர்.

அதேபோன்று இராயபுரம் சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட 52வது வார்டு பாரூக் மஹாலில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் சிறப்பாக நடைபெற்றது.

இந்த முகாமில், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி கலந்து கொண்டு, ஆய்வு செய்தார்.

இந்த நிகழ்வில் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வா.பெ. சுரேஷ், மாமன்ற உறுப்பினர் திருமதி. கீதா சுரேஷ், வட்டச் செயலாளர் புகழேந்தி, அரசு துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட, கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

இராயபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 51வது வார்டு காலிங்கராயன் தெரு, அண்ணா திருமண மாளிகையில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பாக நடைபெற்றது. இந்த முகாமில், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி கலந்து கொண்டு, அனைத்து துறைகளிலும் பொதுமக்களின் மனுக்கள் முறையாக பதிவு செய்யப்பட்டுகிறதா என்பதை ஆய்வு செய்தார். இந்நிகழ்ச்சியில் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் அவர்கள், 51வது வார்டு வட்டச் செயலாளர்கள் ஆறுமுகம், கண்ணன் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட, கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள், பொது மக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் கிழக்கு பகுதி சார்பில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனையின் படி திருவொற்றியூர் கிழக்குப் பகுதி செயலாளர் – 1வது மண்டலக் குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் பகுதிக் கழக அலுவலகத்தில் பகுதி அவைத் தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி தலைமையில் வட்ட செயலாளர்கள், பாக முகவர்கள் BLA –2, துணை பாக முகவர்கள் BLC ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் திருவொற்றியூர் தொகுதி பொறுப்பாளர் தியாகராயர் நகர் எஸ்.மோகன் ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், இரா.முருகேசன், டி.ஏ.ராஜ், சாந்தி, எம்.வி.குமார், கே.பிரபாவதி, ஆர்.குமரேசன், த.கார்த்திகேயன், டி.சி.வி.மணிகண்டன், எம்.எல்.சரவணன், எஸ்.தமிழ்செல்வன், குருத்து சி.முனுசாமி, க.வீ.சதிஷ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர், ஏகா.கார்த்திகேயன், பி.எஸ்.சைலஸ், ஆர்.டில்லிராஜ், எஸ்.பாஸ்கர், ஒய்.ரஜினிநந்தி, ஆர்.ரஜினிபாபு, வி.பழனிவேல், ம.ஜெயராமன், கே.கார்த்திகேயன், ப.சந்தானகிருஷ்ணன், அ.அப்துல்சலிம், ம.எத்திராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.